பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
28 05 2026 THURSDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. திடக்கழிவுகளை மறுசுழற்சி செய்ய வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

3. பொதுமக்களுக்கு மேம்பட்ட போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில அமைச்சர் திரு. விஜய் தமிழன் பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

4. நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில், அடுத்த 2 தினங்களுக்கு ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

தூய்மை இந்தியா இயக்கத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகளை திறம்பட அமல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில், பிரதமர் தலைமையில் நடைபெற்ற பிரகதி கூட்டத்தில் பேசிய அவர், இந்த இயக்கத்தில் மக்கள் பெருமளவில் பங்கேற்பதை ஊக்குவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உள்கட்டமைப்பு வசதிகளின் உருவாக்கத்தைக் கடந்து, தூய்மை நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கச் செய்வதுடன், தொடர்ந்து அவற்றை கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கான கோபர்தன் ஆலை உட்பட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

இக்கூட்டத்தில், ரயில்வே, மின்சாரம், சாலை உள்ளிட்ட துறைகளில், ஒன்பது மாநிலங்களை உள்ளடக்கிய 30 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ஏழு முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களை பிரதமர் ஆய்வு செய்தார்.

பொருளாதார வளர்ச்சி, பொது நலன் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் உரிய காலத்திற்குள் நிறைவு செய்வதுடன், பல்வேறு முகமைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

நாட்டில் பெட்ரோலிய பொருட்களின் விநியோகம் சீராக உள்ளதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும், மக்கள் இது குறித்து பதற்றமடையத் தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளார்

மேற்கு ஆசியாவில் பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையிலும், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு சிறப்பாக செயல்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

உணவுப் பொருட்களின் விலையை தொடர்ந்து கட்டுக்குள் வைத்திருக்கும் வகையில், விவசாயிகளுக்கு உரங்கள் மற்றும் இதர அத்தியாவசிய வேளாண் பொருட்கள் போதிய அளவில் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

முன்னதாக, மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழுக் கூட்டம், திரு ராஜ்நாத் சிங் தலைமையில் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

>>>>><<<<<

வேளாண் துறையின் வளர்ச்சிக்காகவும், விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் மத்திய அரசு தொடர்ந்து பணியாற்றி வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

முக்கிய பயிர் வகைகளின் உற்பத்தி குறித்த மூன்றாவது மதிப்பீட்டு அறிக்கையை புதுதில்லியில் அவர் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியில் சாதனை படைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக கூறினார்.

நாட்டில் உணவு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், வர்த்தகப் பயிர்கள் உற்பத்தி வலுவான நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முக்கிய பயிர் வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க ஏதுவாக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் ஆய்வுகள் முக்கிய பங்கு வகிப்பதாக திரு சிவராஜ் சிங் சௌகான் கூறினார்.

>>>>><<<<<

தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை, நாடுமுழுவதும் இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, நாடுமுழுவதிலும் உள்ள மசூதிகளில் நடைபெறும் சிறப்பு தொழுகைகளில் ஏராளமானோர் பங்கேற்றுள்ளனர்.

மத நல்லிணக்கம், சகோதரத்துவம், ஈகை ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, தலைவர்கள் பலர் இஸ்லாமிய மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் படி, சென்னை மாவட்டத்தில் உள்ள காவல்நிலையங்கள் தொடர்புடைய காணாமல் போன குழந்தைகள் குறித்த வழக்குகளில் உதவிபுரிய பாரா சட்டப்பணி தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்படவுள்ளதாக சட்டப்பணி ஆணைக் குழு அறிவித்துள்ளது.

தகுதி வாய்ந்தவர்கள் இதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 1ஆம் தேதிக்குள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழு அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

>>>>><<<<<

அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் மற்றும் பேருந்து நிலையங்களில் பொதுமக்களுக்கு போதிய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அதிகாரிகளுக்கு மாநில அமைச்சர் திரு. விஜய் தமிழன் பார்த்தீபன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், போக்குவரத்து துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய அவர், அரசு போக்குவரத்துக் கழகங்களின் வருவாயை அதிகரிப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, போக்குவரத்து துறையை மேம்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பேருந்துகள் நிற்கும் உணவகங்களில் பரிமாறப்படும் உணவுகளின் தரத்தை உறுதி செய்ய வேண்டும் என்றும், பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. விஜய் தமிழன் பார்த்தீபன் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

மனித - வனவிலங்குகள் மோதலால் ஏற்படும் உயிரிழப்பை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநில வனத்துறை அமைச்சர் திரு. ரஞ்சித் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை, கிண்டியில் உள்ள வனத்துறை தலைமையகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், மனித – வனவிலங்கு மோதலால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் பயிர்ச் சேதங்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணத் தொகையை விரைந்து வழங்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

வனத்துறையின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அனைவரும் இணைந்து பங்காற்ற வேண்டும் என்று திரு. ரஞ்சித்குமார் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில், அடுத்த 2 தினங்களுக்கு ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, ராணிப்பேட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் அதிகபட்ச வெப்பநிலை, 40 டிகிரி செல்சியஸாக இருக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*இந்நிலையில், திண்டுக்கல் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - ராஜசேகர பாரதி 27 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

*இருவரிச் செய்திகள்*

*எத்தியோப்பியாவில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலையொட்டி, நடத்தை விதிமுறைகளைக் கண்காணிப்பதற்காக ஆப்பிரிக்க யூனியன், தேர்தல் பார்வையாளர் குழுவை பணியமர்த்தியுள்ளது.*

>>>>><<<<<

*வெளிநாடுகளில் உள்ள நேபாள மக்களுக்கு ஆன்லைன் வாயிலாக தூதரக சேவைகளை வழங்கும் நோக்கில், புதிய மொபைல் செயலி ஒன்றை அந்நாட்டு அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.*

>>>>><<<<<

*காங்கோ நாட்டிற்கு இந்தியா அளித்துள்ள அவசரகால மருந்துகளுக்கு, ஆப்பிரிக்க நோய் கட்டுப்பாட்டு மையம் வரவேற்பு தெரிவித்துள்ளது.*

>>>>><<<<<

*இந்திய - பங்களாதேஷ் எல்லை பகுதிகளில் வேலி அமைப்பதற்காக 149 புள்ளி ஏழு ஒன்பது ஏக்கர் நிலத்தை மேற்குவங்க மாநில அரசு எல்லை பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைத்துள்ளது.*

>>>>><<<<<

*இந்தியாவில் இஸ்லாமிய பெண்களுக்கான உரிமைகள் குறித்த அறிக்கையை, உள்துறை அமைச்சகத்திடம் தேசிய மகளிர் ஆணையம் சமர்ப்பித்துள்ளது.*

>>>>><<<<<

*அணைகள் பாதுகாப்பு குறித்த ஒருநாள் பயிலரங்கை தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையம் புதுதில்லியில் நேற்று நடத்தியது.*

>>>>><<<<<

*தூத்துக்குடி மாவட்டத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு முகாம் ஜூன் மாதம் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திரு விஷ்ணு மகாஜன் தெரிவித்துள்ளார்.*

>>>>><<<<<

*காஞ்சிபுரம் மாவட்டம், நத்தப்பேட்டையில் அமைக்கப்பட்டு வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஆட்சியர் திருமதி. சினேகா நேற்று ஆய்வு செய்தார்.*

>>>>><<<<<

*கரூரில் பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோவில் வைகாசிப் பெருவிழாவையொட்டி, கம்பம் ஆற்றில் விடும் விழா வெகுவிமர்சையாக நடைபெற்றது.*

*>>>>><<<<<*

*திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோவில் உண்டியலில் இருந்து 28 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய் ரொக்கம், 29 கிராம் தங்கம் மற்றும் 927 கிராம் வெள்ளி காணிக்கையாகக் கிடைத்துள்ளது.*

*>>>>><<<<<*

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

*சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், அவர், 21-17, 21-15 என்ற செட் கணக்கில் சீனாவின் Lu Guangzu - வை வென்றார்.*

*>>>>><<<<<*

*ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணி 47 ரன் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.*

*>>>>><<<<<*